Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 64** கர்த்தாவே, பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்; கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும். சங். 140:1 நவம்பர் 2018 No.11

## போராடி ஜெபிப்பவர்களுக்கான அழைப்பு

### *The call for wrestlers in Prayer*

Ruth Paxson

எபேசியருக்கெழுதப்பட்ட நிருபம், கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வாதம் பெற்று கிறிஸ்துவுடன் உடன் பங்காளியும் தேவனுடைய சுதந்தரமுமாயிருக்கிறான் என ஆரம்பிக்கிறது. தொடர்ந்து கிறிஸ்தவன் உடன் கிறிஸ்தவர்களோடு அன்புடனும் மகிழ்ச்சியுடனும் உறவு கொண்டு கர்த்தருக்கு ஏற்றவனாக கிறிஸ்தவ நடைமுறையில் வாழுவதாகவும் காண்கிறோம்.

ஆனால் 6-ம் அதிகாரம் 10-ம் வசனத்திற்கு வரும் போது ஒரு பெரிய மாற்றம்! திடீரென அமைதியான சூழலிலிருந்து பயங்கரமான யுத்தக்களத்திற்கு வருகிறோம். அங்கு யுத்தத்திற்கு ஆயத்தமாகும் சேனைகளும், யுத்தத்திற்கான அழைப்புகளும், அதன் நெடியும் வீசுகிறது. பத்து முதல் 18 வசனங்கள் வரையிலும் கிறிஸ்தவன் சந்திக்கும் எதிரியைக் குறித்தும் அவனோடு போர் தொடுக்க வேண்டிய கட்டாயத்தைக் குறித்தும் வாசிக்கிறோம். பரலோக அனுபவங்களோடும் தூய ஆவியினால் நிரப்பப்பட்டும் வாழுகிற நாம் சந்திக்கும் தவிர்க்கமுடியாத போராட்டம் இது. நாம் இவ்வுலகில் பரதேசிகள். உலகமோ பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது 1 யோ.5:19. எனவே தைரியமாக இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

கர்த்தரிலும் அவரது சத்துவத்திலும் பலப்பட வேண்டும். எதிர்த்து நிற்க வேண்டும். வேண்டுதல் செய்ய வேண்டும் (எபே.6:10, 12, 14, 18) ஜெப வீரருடைய ஆவி வித்தியாசமானது. கிறிஸ்துவுக்கு நேராக பெலவீனத்தை உணர்ந்து பெலனுக்காகத் தேடிக்கொண்டிருக்கிறது. சாத்தானுக்கு நேராக பெலனை உணர்ந்து அதை வெளிப்படுத்தி வெற்றிபெறுகிறது. இந்த இரு நிலைகளும் ஜெபத்தினால் விளையும் பலன்களாகும்.

இந்த பயங்கர எதிரியை மேற்கொள்ள கிறிஸ்தவ வீரனுக்கு தன்னில்தான் எந்தத் திறமையுமில்லை. அவன் தனியாக சாத்தானுக்கு முன் நின்றால் அவனது சேனையைக் கண்டு பயந்து ஓட வேண்டியதுதான். ஆனால் ராஜரீக சேனாபதியின் வார்த்தையை ஒப்புக்கொள்ள வேண்டும். 'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' யோவா.15:5. எனவே ஆண்டவரோடு நெருங்கிய உறவுடன் இருக்க வேண்டும். இடைவிடாத ஜெபம் சேனாதிபதியாகிய வெற்றி வீரர் கிறிஸ்து வெற்றி தேடித்தர ஏதுவாயிருக்கும்.

எபேசி.6:18 வாசிக்க.

### எந்தச் சமயத்திலும் ஜெபிக்க வேண்டும்

வார்த்தைகள் கூறப்படாவிட்டாலும் எல்லாவற்றிற்காகவும் எல்லா வேளைகளிலும் அண்ணாந்து பார்த்து உள்ளான மனதோடு இடைவிடாது ஆண்டவரோடு உறவுடனிருக்க வேண்டும். சாதாரண நாட்களிலும், இக்கட்டுகளிலும் அவரையே முற்றிலுமாக சார்ந்து கொள்ள வேண்டும். ஆனால் சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க ஆயத்தப்பட வேண்டுமானால் அதற்குரிய ஞானத்தையும், பெலனையும் பெற்றுக்கொள்ள குறிப்பிட்ட சமயத்தை ஜெபத்திற்காக ஒதுக்க வேண்டும்.

ஒரு பரிசுத்தவான் தேவனோடு ஜெபத்தின் மூலம் போராடி அவரது சர்வ வல்லமையை தனக்கு எதிராக விளங்கப்பண்ண முடியும் என்பதை சாத்தான் நன்கு அறிவான். எனவே நாம் ஜெபிக்காமலிருக்க வழிவகைகளை ஏற்படுத்துவான். சரீர களைப்பு, மந்தமான நிலை, நமது குடும்பம், பணி ஆகியவற்றின் மூலம் மன உளைச்சல், சந்தேகம், மன அழுத்தம் போன்றவற்றைத் தருவான். அவன் தன் கால்களை நமது இருதயத்தில் ஊன்றிவிடுவதால் ஜெபிக்கத் தடை வந்தாலும் நாம் ஜெபிக்க வேண்டும்.

### எல்லா வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்

எல்லா சந்தர்ப்பங்களிலும், ஜெபக்குழுக்களிலும், ஜெபக்கூடுகைகளிலும், பொது ஆராதனைகளிலும், தேவபிள்ளைகள் சமூகமாகக் கூடுமிடங்களிலும் ஜெபிக்கலாம். எல்லா இடங்களிலும் ஜெபிக்கலாம். அறைக்கதவைப் பூட்டியோ, காலைதோறும் குடும்பமாகவோ, வேதபாட வகுப்பிலோ தியானக் கூடுகையிலோ ஜெபிக்கலாம். எல்லா சமயங்களிலும் ஜெபிக்க வேண்டும். சாதகமான சூழலிலும், எதிரான சூழலிலும், சுகவீனத்திலும் சுகத்திலும், காலையிலும், மத்தியான வேளையிலும், இரவிலும், சங்கீதக்காரனைப் போல் ஜெபிக்க வேண்டும். எல்லாவற்றிற்காகவும் ஜெபிக்க வேண்டும். நமது தனிப்பட்ட வாழ்வு, குடும்பம், வியாபாரம், பணி எவற்றிலும் சாத்தான் புகுந்துவிடாதபடி ஜெபிக்க வேண்டும். அனைத்தும் ஜெபத்தில் அடங்க வேண்டும். "சத்துரு ஆச்சரியமான விதத்தில் திடீரென தாக்குதல் ஏற்படுத்தினபடியால் நாங்கள் அவனை எதிர்க்க ஆயத்தமாயிருக்கவில்லை" என்று ஒரு நண்பர் கூறினார்.

**விண்ணப்பத்தோடும்:–** நம்முடைய தேவைகளுக்கும் சாத்தானை எதிர்ப்பதற்குத் தேவையான வல்லமைக்கும் ஜெபிப்பதோடு பிறருக்காகவும் விசேஷமாக ஜெபிக்க வேண்டும். அவர்களுடைய தேவைகள் கஷ்டங்கள் ஆகியவற்றிற்காக ஜெபிப்பது அவசியம். பேதுரு சிறைச்சாலையிலிருந்தபோது சபையார் அவனுக்காக ஊக்கமாக ஜெபித்தனர்.

**ஆவியில் நிறைந்து :–** ஆவிக்குரிய போராட்டத்தில் மாம்சபிரகாரமான ஆயுதங்கள் பயன்படுவதில்லை. மாம்சத்தில் ஜெபித்தாலும் வல்லமை பெறமுடியாது. போராட்டத்தில் வெற்றிபெற ஜெபம் தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர் யுத்தக்களத்தை முழுமையாகக் காண்கிறவர். பிசாசின் திட்டங்களையும் அவர் அறிவார். அவரே தமது அநாதி திட்டத்தின்படி ஒவ்வொரு பகுதியையும் நடத்துகிறவர். தேவனே நாம் ஜெபிக்க வேண்டிய ஜெபத்தை நமக்கு கற்பிக்க வேண்டும். அது அவருடைய இருதயத்திலிருந்து நேரடியாக, மிகுந்த பாவ உணர்வோடும் அவசரத்தோடும் நம்பிக்கையோடும் வெளிப்பட வேண்டும். இது தூய ஆவியானவரின் பணி.

சாத்தான் ஒளித்திருந்து தாக்குவதும், அவனது கபடமான வலைகளும்

(3-ம் பக்கம் பார்க்க)

**நவம்பர் மாத உபவாச ஜெபம்**

Heart cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2018**

**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : ***17.11.2018***
3-வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை
இடம் : **பிலதெல்பியா சபை**
34, வசந்தா நகர்,
உழவர் சந்தை எதிர்புறம்,
கோயம்பத்தூர்

தொடர்பு : பாஸ்டர் **K. எஸ்றா ஆபிரகாம்**
மொபைல் : 8056700100

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
**Mobile:** 95432 21008, **mail:**Varukayinthoothan@hotmail.com

**வங்கி கணக்கு :** VARUKAYIN THOOTHAN, A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006


## இம்மாத பொன்னான சிந்தனை

தரைமட்டும் உன்னை தாழ்த்திக் கொள்ள முடிந்தால், வானளவு உன்னை உயர்த்த தேவனால் முடியும்.

## வாக்குத்தத்தம்

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

ஏசாயா 41:10

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

**பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.**

நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம் பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து,

உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனசாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன் 2 தீமோத்தேயு 1:2-4.

அநேக வருடங்களுக்கு முன்பு வருகையின் தூதன் அலுவலகத்திற்கு வயதான ஒருவர் வந்திருந்தார். அவர் கையில் துணி பை இருந்தது. அதற்குள் வருகையின் தூதன் பத்திரிகை இருந்தது. இவ்விதமாக வேத புஸ்தகத்திற்கு பிறகு தூதனை நேசித்து, வாசித்து பயனடைவோர் அநேகர். அந்தமான் உபவாச ஊழியத்தின் மொழிபெயர்ப்பில் எனக்கு மிகவும் உதவியாயிருந்த தேவ மனிதர், "**வருகையின் தூதன் பத்திரிகையை செதில் பிடிக்கும்மட்டும் பத்திரப்படுத்தி வைத்திருந்தோம், இன்று வரை அதன் தரம் குறையாமல் இருக்கிறது**" என்றார். தேவன் மாத்திரம் மகிமைப்படுவாராக.

செப்டம்பர் மாத வருகையின் தூதன் பத்திரிகையை படித்த வாசகர்களில் சிலராவது எனக்கு போன் பண்ணுவார்கள் என்று எதிர்பார்த்தேன். தினசரி செய்தி தாளில் அந்தச் செய்தியை முழுமையாக படித்து அடியேன் அழுதேன். அப்பொழுதுதான் எனக்கு ஏசாயா 49:15 ஞாபகம் வந்தது. Can a woman forget her sucking child that she should not have compassion on the son of her womb? என்று தேவன் கேட்கிறார். ஆம், பால்குடிக்கும் குழந்தையை தாய் மறக்க முடியுமா?

இன்று சில தாய்மார் பாவ வாழ்க்கைக்காக தங்கள் சின்னஞ்சிறு குழந்தைகளை பாலில் விஷம் அல்லது தூக்கமாத்திரை கலந்து கொடுத்து கொல்லுவதை தினசரி செய்தி தாள்களில் படிக்கிறோம் அல்லவா! எனவே தான் தேவன், Yea, they may forget, yet will I not forget thee. ஆம் தாய் மறக்கலாம், ஆனால் நான் உன்னை மறக்கமாட்டேன் என்கிறார். இதோ ஒரு கடிதம்

Praise the Lord 20.09.2018

கர்த்தருக்குள் அன்பான பாஸ்டர் அவர்களுக்கு - தேவனின் இனிய நாமத்தினால் ஸ்தோத்திரம்.

"வருகையின் தூதன்" வாழ்க்கைப் பயணத்திற்கு வழிகாட்டியும் ஆவிக்குரிய பாதைக்கு வெளிச்சமாகவும் காணப்படுகிறது. தூத்துக்குடியில் **Rev. தேவதாசன்** ஐயா ஊழியம் செய்த காலம் முதல் இதுவரை என்னை உற்சாக மூட்டிவரும் செய்திகளுக்கு ஸ்தோத்திரம். உபவாசஜெபம் தான் நாட்டிற்கு தேவை. அதை நடத்தி வரும் உங்களுக்கு தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கிறேன் (எனது வயது 82).

கர்த்தர் பலவகையில் ஊழியம் செய்ய பலப்படுத்தி வருகிறார். கடைசிவரை சுகபெலத்துடன் பாதுகாக்கவும் இதயத்தில் வேண்டி நிற்கும் ஜெபங்களுக்கு பதில் பெற்று தேவனை மகிமைப்படுத்த வேண்டும். இத்துடன் 1000/- cheque வைத்துள்ளேன். பெற்றுக்கொண்டு எங்கள் குடும்பத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

கர்த்தரின் பணியில்
M.S., திருச்சி.

N.B : பத்திரிகை செய்தி

"தாய்மையும் கடமையும் கலந்த பெண்மை" என்ற செய்தியின்படி பெண்கள் செயலாற்ற அதிகாரிகளும் நடக்க ஜெபிப்போம். ஆமென்.

* * *

அக்டோபர் மாத பத்திரிகையில் நீங்கள் வாசித்த சில பகுதிகளை திரும்பவும் கீழே அச்சிடுகிறேன்:

நீங்கள் உங்கள் பிள்ளைகளை நேசித்தால் அவர்கள் ஆத்துமாக்களுக்கு வேதபுத்தகத்தைக் கொண்டு பயிற்சி கொடுங்கள். மற்ற புத்தகங்கள் இரண்டாவதாயிருக்கட்டும். சிறுவயதிலேயே முழு வேதாகமத்தையும் படிக்க கொடுங்கள்.

**ஜெப பழக்கம்**

பிள்ளைகளை ஜெபிக்கப் பழக்குங்கள். ஆவிக்குரிய செழிப்பிற்கு ஜெபம் மிகப்பெரிய இரகசியம். அதிகமாக ஜெபிக்கும்போது ஆத்துமா மழையைக் கண்ட புல்லைப்போல் செழிக்கும். ஜெபம் குறைந்தால் வளர்ச்சி குன்றி செயலற்று விடும். **ஒரு வளரும் கிறிஸ்தவன், முன்னேறும் கிறிஸ்தவன், உறுதியான கிறிஸ்தவன் செழித்து வளரும் கிறிஸ்தவன் நன்றாக ஜெபிப்பான்.** அவன் அதிகமாகக் கேட்டு அதிகமாகப் பெற்றுக் கொள்கிறான். ஆண்டவரிடம் எப்போதும் பேசுவதால் எப்படி செயல்பட வேண்டும் என்பதை அறிவான்.

ஆசிரியர் கடிதத்தின் இந்த பகுதியை 22.10.2018 அன்று அந்தமானில் இருந்து எழுதினேன். அந்தமானில் தேவனுடைய மகிமையான ஊழியத்தை அக்டோபர் 16-ம் தியதியிலிருந்து, 22-ம் தியதி வரை **7 நாட்கள்** செய்ய தேவன் இரக்கம் பாராட்டினபடியால், "....... தரையிலே முகங்குப்புற குனிந்து பணிந்து, கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி, அவரைத் துதிக்கிறேன்" 2 நாளாகமம் 7:3.

### எங்களுடைய உண்மையான நன்றிக்குரியவர்கள்

**1.** வருகையின் தூதன் வாசகரின் உற்சாகமான கடிதங்களுக்காகவும், உதாரத்துவமான காணிக்கைகளுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தேவனுக்கு மகிமையாக ஒரே ஒரு கடிதத்தை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன்:

அன்புள்ள ஆசிரியருக்கு,

கர்த்தர் உங்கள் ஊழியத்தை ஆசீர்வதிப்பாராக. நான் 1973-ம் வருஷம் முதற்கொண்டு உங்கள் பத்திரிகையை வாசித்து வருகிறேன். ஆவிக்குரிய வாழ்விற்கு அனுகூலமாக உள்ளது. இரண்டு காசோலைகள் எண் 151106- ரூ.5000/- 151107 - ரூ.5000/- இத்துடன் இணைத்துள்ளேன். ஒன்று உபவாச ஜெபத்துக்கும் மற்றொன்று முன்னேற்ற பணிக்குமாகும். எனக்கு 79 வயது ஆகிறது. இந்த மாதம் 80 தொடங்கும்.

இயேசுவின் நாமத்தில்
E.A.J., சென்னை

* * *

16-ம் தியதி சென்னையிலிருந்து அந்தமான் போய் சேர்ந்தோம். 17-ம் தியதி மாலை வழக்கமாய் நடைபெறும் ஒரு ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்டு தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தோம். 18-ம் தியதி காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை ஆயத்த உபவாச ஜெபத்தை சில போதகர்களோடே நடத்தினோம்.

**2.** 19-ம் தேதி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை **ஜுப்ளி ஹால்**, பிஷப் ஹவுஸ், டயரி பார்ம், போர்ட் பிளேர், அந்தமானில் நடைபெற்ற **எழுப்புதலுக்காக இதய கதறல்** 7 மணி நேர உபவாச ஜெபத்தை முன்னின்று நடத்தின பாஸ்டர்

(8-ம் பக்கம் பார்க்க)

| உபவாச ஜெபம் | முன்னேற்றப்பணி |
|---|---|
| WESLEY DEVADASON | WESLEY DEVADASON |
| A/c. No.: 370601000002557 | A/c. No.: 61822200136904 |
| I.O.B., Court Road, Nagercoil-1 | Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 |
| IFSC Code : IOBA0000063 | IFSC Code : SYNB0006182 |

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நமக்கு தெரிவதில்லை. ஆனால் எல்லா ஞானமுமுடையவரும், விழிப்புடனிருப்பவருமான ஆவியானவர் அனைத்து ஆபத்துக்களையும் படுகுழிகளையும் காண்கிறார். எனவே அவர் நம்மை ஜெபிக்கத்தூண்டி முன்னெச்சரிக்கையுடனும் ஆயுதம் அணிந்தவர்களாயும் இருக்கச் செய்கிறார். நாம் ஜெபிக்க வேண்டும் என்று அறிந்திருக்கிற யாவையும் ஞாபகத்தில் வைத்திருப்பது எப்படி? அது நம்மால் கூடாதது. தூய ஆவியானவர் அவைகளை நினைவுபடுத்துகிறார். ஆவியானவர் நம்மைத் தூண்டும்போது நாம் ஜெபிக்காமல் இருக்கக்கூடாது. நம்மிலிருந்து ஜெபிக்கிற ஆவியானவர் நமது ஜெபத்தின் அடக்கத்தையும், தன்மையையும் தீர்மானிக்கிறார். ஆவியில் ஜெபிப்பது என்பது ஆவியால் தூண்டப்படுவதும், ஆவியால் சார மேற்றப்படுவதும், ஆவியால் போதிக்கப்படுவதும், ஆவியால் நடத்தப்படுவதும் ஆவியால் வல்லமையூட்டப்பட்டது மாகும்.

### விழித்திருக்க வேண்டும்

ஜெபவீரன் விழிப்புடனிருக்க வேண்டும். அவன் சோம்பலுக்கு இடமளிக்கக்கூடாது. சுயகாரியங்களிலும் ஈடுபடக்கூடாது. அவை தகாதவை. தனது காலத்தை, நெருக்கடியான காலத்தையும் ஜெபத்தில் செலவு பண்ண வேண்டும். திட்டம் பண்ணி தகுந்த சமயத்தை ஜெபத்தில் செலவிட வேண்டும். ஜெபத்தை ஊக்குவிக்கும் காரணிகளை விழிப்புடன் கவனித்து, தடையாயிருப்பவைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். வேத வசனத்தின் மூலம் சபைக்கும், உலகத்திற்குமுரிய தேவ திட்டத்தை அறிந்து கொள்ள வேண்டும். பின்பு நடைபெறும் சம்பவங்களை கவனித்து தேவனுடைய அநாதி திட்டங்கள் நிறைவேறுவதைக் கண்டு அவரைத் துதிப்போம். சாத்தானுடைய முயற்சிகள் மடங்கடிக்கப்படவும் ஜெபிப்போம்.

சோர்ந்து போகாமல் முன்னேறுங்கள். களைப்பு, அதைரியம் தாமதமான பதில், அல்லது அழுத்தங்களால் திசைமாறாதபடி வெற்றி பெறும் வரை விசுவாசத்துடன் விடாமுயற்சி செய்ய வேண்டும்.

### எல்லா பரிசுத்தவான்களுக்காகவும்

நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாய் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருப்பதால் ஒரு அவயவம் பாடுபடும்போது அனைத்து அவயவங்களும் பாடுபடும் *1 கொரி.12:25-26.* கிறிஸ்துவின் சரீரமாகிய தனி அங்கத்தினர் பெறும் தோல்வி கிறிஸ்துவின் சரீரம் முழுமைக்கும் உரியது. அது போலவே, சபையின் வெற்றி ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாத்தானுக்கு மேல் பெறும் வெற்றியைப் பொறுத்தது. எனவே ஒவ்வொரு பரிசுத்தவானும் மற்ற பரிசுத்தவான்களுக்குக் கடமைப்பட்டவர்கள். அனைத்துக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவில் தங்கள் ஐசுவரியத்திற்கு ஏற்புடையவர்களாகவும், தங்கள் உயர்ந்த அழைப்பிற்குப் பாத்திரராகவும் சாத்தானுக்கு எதிராக வெற்றி பெறுபவர்களாகவும் இருப்பதில்லை. அனேகர் உலகத்திற்கேற்றபடியாகவும், மாம்சத்திற்கேற்றபடியாகவும் நடந்து ஆவியானவரை துக்கப்படுத்தி சாத்தானுக்கு இடமளிக்கிறார்கள். எனவே ஒரு சிலர் மட்டுமே ஆவியால் பிரகாசிப்பிக்கப்பட்டு (*எபே.1:17*) ஆவியில் ஜெபித்து (*6:18*) ஆவியால் பெலப்படுத்தப்பட்டு (*3:16*) ஆவியால் நிரப்பப்பட்டு (*5:19*) வாழும் அனுபவத்தை உடையவர்களாயிருக்கின்றனர். இந்தக் குற்றம் சபையின் பெலவீனத்தின் மீது சாட்டப்படலாகாது. ஒவ்வொரு பரிசுத்தவானும் ஜெபிப்பதற்குத் தவறியதே இதற்குக் காரணம்.

குறுகிய மனப்பான்மை, சுயநலம், தனிப்பட்ட எண்ணம் ஆகியவை நமது ஜெபங்களில் காணப்படுகிறது. போரில் வெற்றிபெற அனைத்துப் பிரிவினரும் இணைந்து ஜெபிக்க வேண்டும். புதிய வீரர்கள் சேர்க்கப்பட வேண்டும். காயம்பட்டவர்கள் பராமரிக்கப்பட வேண்டும். குறைபட்ட இடங்கள் நிரப்பப்பட வேண்டும். சேனை வீரர்கள் பயிற்சிக்கப்பட வேண்டும். போர் தொடர தேவையான நிதிகள் சேகரிக்கப்பட வேண்டும். அனைவரும் ஜெபித்தால் மட்டுமே இவைகள் நிறைவேற்றப்பட முடியும். எபே.1:15-19; 3:14-20 வசனங்களில் கூறப்படும் ஜெபங்கள் உத்தமமாக ஏறெடுக்கப்பட்டால் புதிய வாழ்வும் வல்லமையும் சபையில் வருவது நிச்சயம்.

(*எபே.6:19-20 வசனங்கள் படிக்க*)

ஆதித் திருச்சபையின் மனித விசைக்கு முக்கிய காரணமாயிருந்தவர் பவுல். எனவே அவர் சாத்தானுடைய பயங்கர தாக்குதலுக்கு உள்ளானார். அவரை அவன் சிறையில் தள்ளினான். அதனால் போரிலிருந்து அவரை அகற்றி விட்டதாக எண்ணினான். ஆனால் தீரம் மிக்க ஆதி போர்வீரனான அவர் ஜெபத்தின் மூலம் சாத்தானைக் கட்டி விட்டார். சிறையிலேயே கர்த்தருக்காகப் புதிய கொள்ளையை சம்பாதித்தார்.

தைரியமுள்ள அவர் சுயத்தின் மேல் நம்பிக்கை வைக்கவில்லை. தைரியமாகவும் உத்தமமாகவும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், கிறிஸ்துவின் ஸ்தானாபதியாகத் தமது கடமையை நிறைவேற்றவும் அவருக்குப் பெலனும் தைரியமும் தேவையாயிருந்தது. இதற்காக பிற பரிசுத்தவான்களின் ஜெபத்தை அவர் வாஞ்சித்தார். இன்று பணித்தளங்களிலும், வீடுகளிலும் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாகப் பணிபுரியும் நமக்கு இத்தகைய விண்ணப்பம் தேவையன்றோ! இரட்சகர் மூலமாக வரும் பரிபூரண இரட்சிப்பின் சுவிசேஷத்தை தைரியமாக அறிவிக்கும் கிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரர் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். அனேகர் துன்புறுத்தப்பட்டு, சிறையிலும் அடைக்கப்படுகின்றனர். அவர்களுக்காக ஜெபிப்பது அவசியமல்லவா!

### தேவனுடைய படையில் ஓய்வு இல்லை

தன்னோடு போரிலீடுபட்ட பழைய வீரர்களோடு சேர்ந்து, அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு அவர்களை ஜெபத்துணைவர்களாக இணைத்துக் கொள்ளலாம். இன்று ஜெபவீரர்களின் துணைதான் மிகவும் அவசியம். நீங்கள் ஒரு ஜெபவீரராயிருந்தால் அதற்காக சந்தோஷப்படுங்கள்.

கிறிஸ்துவுக்காகவும் சபைக்காகவும், சாத்தானுக்கெதிராகவும் ஜெபவீரனுக்கு அதிகப் பொறுப்புகளுண்டு. கிறிஸ்துவுக்காக ஆண்டவரோடு முழு ஒத்துழைப்புடன் பிதாவின் நித்திய திட்டத்திற்காக அவரிலும் அவர் மூலமாகவும் செயல்பட வேண்டும். இதற்காக சபையைக் குறித்தும், உலகத்தைக் குறித்தும் தேவனுடைய வசனத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சித்தத்தை அறிய வேண்டும். எந்த பணிகள் சபைக்குள்ளே கர்த்தருடைய வழிநடத்துதலின்படி ஆவியானவரால் நடக்கின்றன? எவை உலக ஞானம், மனித தலைமைத்துவம் ஆகியவற்றால் கள்ளப்போதகர்களாலும், தீர்க்கர்களாலும் தவறாக நடத்தப்படுகின்றன என்பவற்றை அறிந்திருக்க வேண்டும். அப்படியானால் மட்டுமே ஞானத்தோடு பணிசெய்யவும், ஜெபிக்கவும், தேவபணிக்காக கொடுக்கவும் முடியும். ஆண்டவரோடு ஜெபத்தின் மூலம் தொடர்பு கொள்வதால் போர்க்களத்தின் எல்லா பகுதிகளிலும் தாக்குதல் நடத்தவும், எதிரியின் களத்தின் கடைசி பகுதிவரையும் ஊடுருவிச் செல்லவும் முடியும்.

சபைக்கு நேராக நமது பொறுப்பு பல்வகையிலானதும் பெரியதுமாகும். வேதவசனத்தின்படி சபை கிறிஸ்துவின் சரீரம், ஆனால் இதனை வார்த்தையின் படியல்ல செயல்முறையில் நாம் அனைத்து பரிசுத்தவான்களோடும் ஒன்றாயிருக்கிறோம். நமக்குள் நிறம், இனம், நாடு, அந்தஸ்து என்ற வேறுபாடுகளில்லை. எனவே ஒன்றாக வாழ்ந்து, செயல்பட்டு, ஜெபித்து கிறிஸ்துவின் சரீரம் உயர் தலங்களுக்கு எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு சாத்தான்மேல் வெற்றியுடனிருக்க வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

### நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தானுக்கு எதிராகவும் நமது கடமை பெரியது. இதை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறிந்ததுமில்லை, ஏற்றுக் கொள்ள விரும்புவதுமில்லை.

அதைக்குறித்து இயேசு சொல்லுவதை *மத்.12:29*-ல் படியுங்கள். மேலும் *லூக்.10:19*-ஐயும் படியுங்கள்.

ஆனால் நமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அறியாமலும் அறிந்தும் பயத்தால் பயன்படுத்தாமலும் இருக்கிறோமல்லவா? எனவே சாத்தான் நம்மைக் கட்டிவிட்டான் (லூக்.13:16) நாம் அவனைக் கட்டத் தவறிவிட்டோம்.

தேவன் கொடுத்த அதிகாரத்தை பயன்படுத்தும் இரகசியத்தைக் கற்றுக் கொண்ட ஜெபவீரர்கள் தேவனுக்கு வேண்டும். அவர்கள் ஜெபத்தின் மூலம் சாத்தானின் தந்திரங்களுக்கு எதிராக நின்று சுவிசேஷத்திற்குக் கதவுகளை அடைக்கும் அவனது வல்லமையையும் அவனது விக்கிரகங்களை வணங்குவதையும், களங்களிலிருந்து மிஷனெறிகளைத் துரத்தும் முயற்சிகளையும், தேவ பணிக்கான நிதிகளைத் தடுப்பதையும், பொய்யான போதகர்களைக் களங்களுக்கு அனுப்புவதையும், சுவிசேஷ சபைகளில் பீடங்களில் தவறான போதனைகள் கொடுக்கப்படுவதையும் அகற்றமுடியும். அதோடு எழுப்புதலை ஏற்படுத்தவும், முழுமையான இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தடைகளை அப்புறப்படுத்தலாம். சபைகளிலும் ஊழியக்களங்களிலும் குழப்பங்கள் முடிவடையவும் பரிசுத்தவான்கள் சோர்படையாமல் காக்கப்படவும் இவ்வாறு கிறிஸ்துவின் வருகையை சபை எதிர்நோக்கவும் இவர்களது ஜெபம் ஏதுவாயிருக்கும்.

ஆனால் பிசாசுக்கு இடங் கொடுப்பதாலும், தூய ஆவியானவரை துக்கப்படுத்துவதாலும் கிறிஸ்தவன் சாத்தானை மேற்கொள்ள முடியாமற் போய்விடுகிறது என்பதை பவுல் அப்போஸ்தலன் தெளிவுபடுத்துகிறார்.

### பிசாசுக்கு இடம் கொடுத்தல் எபே.4:27

கிறிஸ்துவின் முகாமின் தலைமையிடத்தில் சாத்தானுக்கு இடம் கொடுப்பதே இதன் கருத்து. இங்கிருந்து அவன் தனது செயல்பாடுகளை ஆரம்பிக்கிறான். சாத்தானுக்கு இடம் கொடுப்பதால் கிறிஸ்துவின் சேனையின் ஒரு பகுதி அவனது வசமாக்கப்படுகிறது. கர்த்தருடைய சேனையின் மனிதசக்தி குறைந்து சாத்தானுக்கு ஆவிக்குரிய வரங்கள் கையளிக்கப்படுகின்றன. கிறிஸ்து பலவந்தமாக வெளியே தள்ளப்படுகிறார். தேவனுடைய செயல் கட்டுப்படுத்தப்படுகிறது. பிசாசுக்கு இடம் கொடுப்பதால் தேவபக்தியைப் பகுத்து கர்த்தருடைய சேனையில் துரோகிகளும், திருட்டளவாய் ஓடிப்போகிறவர்களாலும் நிரப்பப்படுகிறது.

கிறிஸ்தவ போராட்ட வீரரின் வாழ்வில் இவ்வாறு சாத்தான் தொடர்ந்து ஒரு இடத்தைப் பிடிக்க முயற்சிக்கிறான். அவன் ஒரு சிறு பகுதியைப் பிடித்துக் கொண்டு தன் கால்களை ஊன்ற முயற்சிப்பான். நமது பெலவீனமான பகுதி அவனுக்குத் தெரியும். அப்பகுதி வழியாக அவன் நுழைவான். அவன் தந்திரமாக நாம் அறியாமலே நம்முடனே தொடர்பு வைப்பான். உத்தமமான ஒரு கிறிஸ்தவனிடம் அவன் ஒளியின் தூதனாக வருவான். தந்திரமான அல்லது குரூரமான ஏதேனும் வழியை பயன்படுத்தி தன்னை மறைத்து நுழைந்துவிடுகிறான். அவனுக்கு எப்படியும் ஒரு இடம் வேண்டும். அதன் மூலம் கிறிஸ்தவ போராட்ட வீரன் போரிட முடியாதவனாக்குமட்டும் அவனைக் கட்டுப் படுத்தி தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுவான்.

### தூய ஆவியானவரை துக்கப்படுத்துதல் எபே.4:30

திகைப்போடும், பயத்தோடும் பிசாசுக்கு இடங்கொடாமல் இருந்தால் பிசாசு வெற்றிபெற முடியாது. ஆவியானவர் துக்கப்படுத்தப்பட மாட்டார்.

மகிமையடைந்த கிறிஸ்து நம்மில் வெற்றி வாழ்வைத் தர தூய ஆவியானவர் நம்மில் வாழ்கிறார். அவரால் நாம் நிலைத்து நிற்க முடியும். தேவனுடைய உன்னத பெலனால் நாம் தரிப்பிக்கப்பட்டு உறுதியாய் நிற்க முடியும். தூய ஆவியானவர் நம்மில் செயல்பட முடியாதபடி தடுக்கிறவைகளெல்லாம் பிசாசின் கிரியைகளாகும்.

நம்மில் தூய ஆவியானவரை துக்கப்படுத்தும் காரியங்கள் எவை? தேவனுடைய தன்மைக்கு எதிரான அசுத்தமான காரியங்களெல்லாம் தூய ஆவியானவரை துக்கப்படுத்துகின்றன. அவர் சத்திய ஆவியானவர், விசுவாசம், கிருபை, ஞானம், வல்லமை, அன்பு, ஒழுக்கம், தூய்மை ஆகியவற்றின் ஆவியானவர். எனவே சத்தியமற்றவை, அவிசுவாசம், அன்பின்மை, கட்டுப்பாடின்மை, இரக்கமின்மை, ஞானமின்மை, கனியின்மை போன்றவற்றால் தூய ஆவியானவர் துக்கப்படுத்தப்படுகிறார். எனவே பாவம் எத்தகையதாயிருந்தாலும் எந்த அளவாயிருந்தாலும், அது பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ இருந்தாலும் அது மாம்சத்துக்குரியதாகவோ, ஆவிக்குரியதாகவோ இருந்தாலும் அது தூய ஆவியானவரை துக்கப்படுத்தும்.

### ஆவியினால் நிறைந்து எபே.5:18

வெற்றியுள்ள போராட்ட வீரனுக்கு இதுவே பாடல். ஆவியால் நிரப்பப்பட்ட வீரன் மட்டுமே சாத்தானின் சேனையை மேற்கொள்ள முடியும்.

*எபே.1:17, 6:11, 3:16, 3:19* ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

*"ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத் தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" எபே.6:13.*

# கிருபையில் வளருதல்

***Growth in Grace***

Charles H. Spurgeon 1834-1892

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" *2 பேது.3:18.*

### பொதுவாக கிருபையில் வளருதல்

கிருபையில் வளருவது போன்ற முக்கியமான ஒன்றுமில்லை. தேவ கிருபை நித்தியமானது. எனவே அதற்கு முடிவில்லை. அது அடியற்றதும், கரையற்றதுமாகும். நாம் கிருபை என்னும் கடலில் இருக்கிறோம். நாம் ஆழமான பகுதியிலிருக்காவிட்டாலும் நாம் இருக்குமிடத்தில் வளர வேண்டும்.

தேவ கிருபை நமக்கு நேராக வளராவிட்டாலும் கிருபை வளருகிறது. சிலர் அதிகம் முன்னேறும்போது சிலர் அப்படி முன்னேறாமலிருக்கலாம். சிலர் பிறரைவிட அதிக விசுவாசமுள்ளவர்களாயிருக்கலாம். பெரிய விசுவாசம் மற்றும் அற்ப விசுவாசம், அதிக அன்பு மற்றும் குறைந்த அன்பு உடைய மக்கள் உண்டு. அது போலவே ஆவியில் வாஞ்சை நிறைந்ததும் கிருபையால் முழுவதும் நிரப்பப்பட்டதான மக்களுமுண்டு. அவர்கள் மற்றவர்களை விட அதிகமாக தேவனால் நேசிக்கப்படுகிறவர்கள் என்று முடிவெடுப்பது தவறு. எல்லோரும் ஒரே சமநிலையில் தானிருக்கிறோம். ஆனால் நமது ஆத்துமாக்களில் கிருபை பெருகி வெளிப்படுவதில் வேறு வேறு பரிசுத்தவான்களில் வித்தியாசமுண்டு.

கிருபை பெருகுவதை வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் என்ற அளவில் அளக்க முடியாது. சிலர் 50 ஆண்டுகளாகக் கிருபையில் வளரும் போது சிலர் 5 நிமிடங்களில் வளர்ந்துவிடலாம். மேலும் ஒரே பரிசுத்தவானின் வாழ்வில் இவ்வளர்ச்சி சில காலங்களில் அதிகமாகவும் சில காலங்களில் குறைவுபட்டும் காணப்படலாம். ஏனெனில் தேவன் தமது நித்திய ஞானத்தின்படி இரட்சகரின் காட்சியைத் தரவோ அல்லது என்னில் மறைந்து கிடக்கும் பொல்லாப்பை உடைக்கவோ கூடும். தூய ஆவியானவரின் கரம் நம்மேலிருக்கும் போது பல மாதங்களாகச் சுய முயற்சியில் கற்றுக்கொள்கிற பாடங்களை ஒரே மணி நேரத்தில் கற்றுக் கொள்ள முடியும். தேவ பிள்ளைகள் மரங்களைப் போல வளருகிறார்கள். சில வேளைகளில் குறிப்பாக குளிர்காலங்

(5-ம் பக்கம் பார்க்க)

**அறிவிப்பு**

வருகையின் தூதன் பத்திரிகைக்கு சந்தா கிடையாது. வருகையின் தூதன் ஊழியத்தை உதாரத்துவமாய் தாங்குங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கிளைகளுக்குள்ளே காணப்படும் சாரம் உறைந்துவிடுவதால் கிளை தூங்கிவிடுகிறது.

கிருபையில் வளருதல் நமது உணர்வுகளால் கணக்கிடப்பட முடியாது. உதாரணமாக நாம் மன அழுத்தத்தோடு இருக்கும்போது கிருபையில் வளரவில்லை என்பது பொருளல்ல. தேவனுடைய விருட்சங்களாகிய நாம் பலர் இருளில் நன்றாக வளருகிறோம். அடிக்கடி தேவன் நாம் வளருவதற்காகவே நம்மை இருளில் வைக்கிறார். ஒரு மலை உச்சியில் வளருவதைவிட ஒரு இருண்ட குகையில் நீங்கள் அதிகவேகமாக வளரமுடியும். ஆனால் அதற்குள்ளேயே இருந்துவிடக்கூடாது. தூய ஆவியானவர் நமது குறைகளை வெளிப்படுத்தும்போது நாம் வேகமாக வளரவும் சேராபீன்களின் செட்டைகளுடன் உயர் தலங்களில் ஏறவும் முடியும்

நாம் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் நாம் விசுவாசத்தால் அவருக்குள் இருக்கிறோமே தவிர உணர்வுகளாலல்ல. உங்கள் உணர்வுகள் எப்படியிருந்தாலும் நீங்கள் தேவபிள்ளைகள் என்பதை மறக்க வேண்டாம். உங்கள் விசுவாசமே உங்களை தேவ ஆட்டுக்குட்டியோடு இணைக்கிறது. எனவே எல்லா சூழல்களிலும் அவரைக் காணமுடியாவிட்டாலும் அவரை சார்ந்து கொள்ளுங்கள். நடக்கும் பாதை தெரியாவிட்டாலும் நடந்து கொண்டேயிருங்கள். எனெனில் உங்கள் பாதங்களுக்குக் கீழ் உறுதியான விசுவாசமிருக்கிறது.

### கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருங்கள்

கிருபையில் வளருவது, கர்த்தரை அறியும் அறிவில் வளருவதோடு நெருங்கிய உறவுடையது. கிறிஸ்துவை அறியும் அறிவில் நாம் வளராவிடில் கிருபையில் பெருக முடியாது. நேற்று நான் கிறிஸ்துவை அறிந்திருப்பதை விட இன்று நான் அதிகமாக அவரை அறிந்திருக்கிறேனா? நேற்றை விட இன்று நான் அவருக்கு மிக அருகில் வந்திருக்கிறேனா? என்ற கேள்விகளை நாம் கேட்டுப் பார்க்க வேண்டும். நிமிடத்திற்கு நிமிடம் அவரை அறிகிற அறிவில் வளருவது கிருபையில் நாம் வளருவதை எடுத்துக் காண்பிக்கிறது. இதை நிரூபிக்க சில கிறிஸ்தவ பண்புகளைக் குறித்து கீழே சிந்திப்போம்.

**அன்பு :-** "நான் அதிக அளவில் கிறிஸ்துவை நேசிக்கவில்லையே" என்று சொல்வதற்குப் பதிலாக நான் இயேசுவை நேசிக்க விரும்புகிறேன். என் இருதயம் அவரை வாஞ்சிக்கிறது, எனது ஆத்துமா அவரோடு பின்னிப் பிணைந்திருக்கிறது என்று சொல்லுங்கள். அன்பில் வளர கிறிஸ்துவைக் குறித்து அதிகமாக அறிய வேண்டும். எவ்வளவு அதிகமாக அவரை அறிகிறோமோ அவ்வளவாக அவரில் அன்புகூர முடியும். அவரது அழகு, மேன்மை, நற்குணம், பரிபூரணம் மற்றும் மகிமைகள் அறியப்படும்போது நீங்கள் அவருக்கு நேராக இழுக்கப்படுவீர்கள். எனவே அவரை இன்னும் அதிகமாக அறிந்து, அதிகமாக வாசித்து, நினைத்துப் பார்த்து, கேட்டுப் பாருங்கள். நிச்சயமாக நீங்கள் கிருபையிலும், அன்பிலும் அவரை அறிந்திருக்கிற அறிவிற்கேற்றபடி வளர முடியும்.

**விசுவாசம் :-** இன்று நாம் விசுவாசத்தில் குறைவு பட்டுக் காணப்படுகிறோம். இதற்குக் காரணம் கிறிஸ்துவைப் பற்றி நாம் போதுமான அளவு அறியவில்லை. நம்மிலுள்ள குறைபாட்டினை நாம் கண்டுபிடிக்க முடியாது. கண்டுபிடிக்க முயல்வதும் தவறு. அதினால் விசுவாசம் வளருவதில்லை. நீங்கள் சிலுவையினருகில் வரவேண்டும். விசுவாசத்தின் இனிய மலர் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற உதிரத்தில் தான் மலர்ந்தது. எனவே அதினால்தான் அனுதினமும் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டும். கிறிஸ்துவைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளுங்கள்; அப்போது உங்கள் விசுவாசம் பெருகும். உங்கள் சிறிய விசுவாசம் உறுதிப்பட இயேசுவை நம்பி வாழுங்கள்.

**தைரியம் :-** அனேக கிறிஸ்தவர்கள் இதில் குறைவுப்பட்டிருக்கின்றனர். கிறிஸ்துவின் அறிவில் வளரும்தோறும் தைரியமும் அதிகரிக்கும். கிறிஸ்துவை சரியாக அறியாதபடியால் பயம் வருகிறது. எனவே கிறிஸ்துவை அறியும் அறிவில் வளரும்போது எதைக் கண்டும் பயப்பட வேண்டாம்.

**நமது உற்சாகம் :-** இந்த நாட்களில் நம்மில் மிகவும் குறைவுபட்டுக் காணப்படுவது உற்சாகம். உற்சாகம் நம்மைக் கிறிஸ்துவுடன் நெருங்கி வாழ ஏதுவாகிறது. கிறிஸ்துவை அறிந்த ஒரு விசுவாசி, இரட்சகர் எனக்காகத் தமது இரத்தத்தை சிந்தினார்; எனவே, அவருக்காக மரிக்கவும் நான் ஆயத்தமாயிருக்க வேண்டும். அவர் பரத்தை விட்டு இங்கு வந்து மக்களுக்காக மரித்தால் நானும் அவருக்காக மக்களை ஆதாயம் பண்ண நாடவேண்டாமா? என்று கூறுவான். கிறிஸ்து நம்மிலிருந்தால் நாம் சோம்பேறி பிரசங்கிமாராயிருக்கமாட்டோம். நமது சபைகளில் விசுவாசிகள் நிர்விசாரக் கிறிஸ்தவர்களாக இருக்கமாட்டார்கள். நாம் நமது இரட்சகரைக் குறித்து அதிகமாக அறிந்திருந்தால் அதிகக் காட்சிகளைப் பெறுவோம். அவரை அடிக்கடி சிலுவையில் தரிசித்தால் நாம் "ஆண்டவரே என் சோம்பலை விட்டு விடுகிறேன், உமக்காக நான் செய்யும் யாவும் மிகக் குறைவே" என்று கதறுவோம்.

"நானும் எனக்குள்ள யாவும் என்றும் உமக்குரியதே". நான் என்ன செய்ய வேண்டுமோ அதைக் கட்டளையிடும். எனது தேவனை அதிக உற்சாகத்துடன் நேசிக்கிறேன். எனவே அவருக்காக எல்லாவற்றையும் நான் கொடுக்க வேண்டும்."

**சகோதர இரக்கம் :-** உலகில் இந்தப் பண்பு குறைவுபட்டுக் காணப்படுகிறது. இந்த இரக்கம் சத்தியத்தைப் பேசவும் சகோதரர் தவறு செய்யும் போது கண்டிக்கவும், சரி செய்து கொள்ள வாய்ப்பு அளிக்கவும் சத்தியத்தைப் பிரசங்கிக்கவும், தேவன் நமக்குப் போதித்ததை அறிவிக்கவும் அதோடு, "நீங்கள் எனக்கு முரண்பட்டிருக்கிறீர்கள் ஆயினும் உங்களை நேசிக்கிறேன்" என்று சொல்லக் கூடியதாகவுமிருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நேர்மையும், உற்சாகமும், பாசமுமுடையவர்கள் என்பது விளங்கும். ஏன் நாம் அன்புகூர வேண்டிய அளவு பிறரில் அன்பு கூரவில்லை. நாம் ஆண்டவரை போதுமான அளவு நேசிக்கவில்லை.

**தாழ்மை :-** கிறிஸ்துவினருகில் நாம் வாழ்ந்தால் நாம் தாழ்மையில் வளருவோம். தாழ்மை சிறந்த பண்பு, ஆனால் காணப்படவில்லை. இதைக் குறித்து அதிகமாகப் பேசுகிறவர்களிடமும் இது காணப்படவில்லை. தாழ்மையே நீ எங்கிருக்கிறாய்? இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து, நான் இழந்து போய்விட்ட பொல்லாத பாவி, ஆனால் தெய்வீக அன்பு என்னைக் கிரயத்திற்குக் கொண்டது என்று கதறும் போது இதனைப் பெறலாம். அப்போது "ஐயோ இரட்சகர் எனக்காக இரத்தம் சிந்தினாரோ? எனக்காக மரித்தாரோ? இந்தப் புழுவாகிய எனக்காக பரிசுத்த அன்பைக் காட்டினாரோ? எனக் கதறுவோம்.

இரட்சகரின் மேன்மையை அறியுமட்டும் நம்மை நாம் தாழ்த்த மாட்டோம். வளரும் கிறிஸ்தவன் தான் ஒன்றுமில்லை என்பான். தேர்ச்சியடைந்தவன் தான் ஒன்றுமின்மையிலும் குறைந்தவன் என்பான். இயேசுவின் அருகில் செல்லச்செல்ல சுயம் சுருங்கிவிடும். சுயமும் கிறிஸ்துவும் நெருங்கமுடியாது. நான் சுயத்திற்கருகிலிருந்தால் கிறிஸ்து சிறியவராய் காட்சியளிப்பார். நான் கிறிஸ்துவினருகில் நின்றால் சுயம் சிறியதாகிவிடும்.

வேதத்தை நன்கு வாசித்து, தூய ஆவியால் நிரம்பி வாழ முயற்சியுங்கள். தியானத்திற்காக சமயம் செலவிடுங்கள். தூய ஆவியானவர் கல்வாரிக் காட்சியை உங்கள் முன் காண்பிக்கட்டும். அவரது மறுரூபமலை அனுபவம், கெத்சமனே பாடுகள், சிலுவையின் வேதனைகள் இவற்றில் இயேசுவோடு பங்கு கொள்ளுங்கள். மகிமையின்மேல் மகிமை பெற்று பரிபூரண மனிதனாக வளருங்கள்.


**டிசம்பர் மாத உபவாச ஜெபம்**

Heart cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2018**

**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : *01.12.2018*
1-வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை
இடம் : **இம்மானுவேல் விக்கரி A.G. சபை**
சவுந்தரி நகர்,
RICE நிறுவனம் அருகில்,
வடக்கன்குளம் - 627 116.

தொடர்பு : **Rev. Dr. S. நியூட்டன்**
மொபைல் : 94888 88064

# தேவ கிருபையின் ஸ்தானாபதிகள்

***Stewards of God's grace***

George D. Watson 1848 - 1923

கிருபையின் செயல்கள் யாவும் நமக்கு அற்புதமானவைகள். குறிப்பாக நமது முரட்டாட்டம் இயற்கையாகவே நம்மிலிருந்தாலும் நம்மை இரட்சித்த தோடு, அவரோடு நம்மைப் பங்காளி களாக்கி, அவரது நல்ல பொக்கிஷங்களை நமது கரங்களில் தந்து அவரது கிருபைக்கு ஸ்தானாபதிகளாக்கி அவர் செய்யும் நன்மைகளில் நமக்குப் பங்களிப்பது ஆச்சரியமானது. நாம் ஜீவிக்கும் தேவனோடு இயேசுகிறிஸ்துவின் மூலம் இணைக்கப்படுவது உயரிய மகிமைக் குரியதாகும். இவ்வாறு அவரது தன்மை களை நாம் பெற்றுக்கொள்கிறோம். அவரது எண்ணங்களும் திட்டங்களும் நமக்கும் சொந்தமாகிவிடுகின்றன.

வேதவசனங்களின் முதற்பகுதி யிலிருந்தே நாம் தேவனுடைய ஈவுகளின் ஸ்தானாபதிகள் என போதிக்கப்படு கிறோம். இயேசு தமது போதனைகளில் அடிக்கடி அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவரது நன்மைகளுக்கு ஸ்தானாபதிகள் என்று குறிப்பிட்டுள்ளார். பேதுரு அப்போஸ்தலன் *1 பேது.4:7-11* வசனங் களில் எத்தகைய முக்கியமான காரியங் களில் நாம் நமது ஸ்தானாபதித்துவத்தை பயன்படுத்தவேண்டும் என்று எழுது கிறார். அவை ஜெபம், தெய்வீக அன்பு உபசரித்தல் மற்றும் தேவனுடைய கிருபையுள்ள ஈவுகளை பகிர்ந்து கொடுத்தல், உதவி செய்தல் ஆகும்.

கிரேக்க புதிய ஏற்பாட்டில் ஸ்தானாபதி அல்லது ஸ்தானாபதிகள் என்ற பதங்களுக்கு பயன்படுத்தப் பட்டுள்ள ஒன்று epitropos என்பது. இது இருமுறை பயன்படுத்தப்படுகிறது. பணத்தை வங்கியில் பத்திரமாக சேமிப் பது போல பொக்கிஷங்கள் ஒருவரிடம் பாதுகாப்பிற்காக ஒப்படைப்பதை இது குறிக்கும். இன்னொன்று oikonomos இப்பதம் *12* முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. இது ஒரு வீட்டாரை அல்லது குடும்பத்தை சரியாக கண்காணிப்பதைக் குறிக்கிறது. oikos - வீடு, nomos - சட்டம் அல்லது ஆட்சி.

இதுவே பேதுரு பயன்படுத்தும் வார்த்தை. தேவனுடைய குடும்பம் அல்லது ஆவிக்குரிய இல்லத்தில் அவர் ஆவியைப் பெற்ற நம்மை மூத்த பிள்ளைகள் அல்லது மேலான வேலைக் காரராக பணிசெய்ய நியமித்திருக்கிறார்.

எனவே உணவு, ஆடை, முன் னேற்றம் போன்ற குடும்ப காரியங்களில் நன்முறையில் செயல்பட வேண்டும். குறிப்பாக குடும்பத்தின் பொக்கிஷங்கள் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக பயன் படுத்தப்படுகிறதா என்பதில் ஜாக்கிரதை யாயிருக்க வேண்டும். நம் சொந்த இன் பங்களுக்காக அவற்றை செலவிடக் கூடாது. தூய ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணுவதால் நம் மூலமாக அவர் இப்பொக்கிஷங்களை பிறருக்காக பயன்படுத்தி நம்மை உத்தம தேவ பணியாளர்களாக மாற்றுவார்.

## ஜெப ஸ்தானாபதிகள்

வச.*7*-ன் படி ஜெபம் பண்ணு வதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஜெபம் தேவனால் சிருஷ்டிப்பில் உண்மையான ஆவிக்குரிய விசையாக அபிஷேகிக்கப்பட்டுள்ளது. உலகில் பல நன்மைகள் ஏற்பட அது ஒரு பரிசுத்த மான கட்டளையாக நமக்கு ஒப்புவிக்கப் பட்டுள்ளது. மேற்கூறிய நன்மைகள் ஜெபத்தைத் தவிர வேறு எந்த முயற்சி யாலும் கிடைப்பதில்லை. ஜெபத்தின் மூலம் நாம் தேவனுடைய கரங்களை அசைத்து பல காரியங்களை செய் கிறோம். அதற்காக விசுவாசத்தோடு போராடி ஜெபிப்பது ஒன்றே நிபந்தனை.

இரட்சிப்புக்கேற்ற விசுவாசத் தையும், சுத்திகரிக்கப்படும் வல்லமை யையும் பெற ஜெபம் ஒன்றே வழி. பிறருடைய நன்மைக்காக ஜெபத்தின் மூலமாகவே தூய ஆவியானவரால் பயன்படுத்தப்படுகிறோம். அப்படியே சுகவீனரைக் குணப்படுத்தவும், ஆத்து மாக்கள் இரட்சிப்படையவும், பிற மக்களின் பாதுகாவலுக்கும் பயனுள்ள பணித்தளங்கள் திறக்கப்படவும் இது போன்ற இவ்வுலகிலும், மறுமையிலும் நன்மைகள் நடப்பிக்கப்பட ஜெபம் ஏதுவாகிறது.

நம்மை தேவ சித்தத்துடன் இணைக்கவும், அவருடைய பரிபூரண திட்டங்கள் ஆகியவற்றில் பங்காளி களாகத் தேவையான நிபந்தனைகளை அறிந்து அவரோடு தொடர்பு வைத்துக் கொள்ளவும் ஜெபம் ஏதுவாயிருக்கிறது. நமது ஆத்துமாக்களின் உட்பகுதியைத் திறந்து காண்பிக்கவும் தேவனைச் சரியாகவும் அழகாகவும் கண்டுகொள்ள வும் உத்தம ஜெபம் தவிர வேறு எந்த வழியுமே இல்லை. உண்மையான ஜெபம் இருதயத்தில் ஆழமான இளைப்பாறுதலைத் தருகிறது. அதே வேளையில் சன்மார்க்க நெறி உலகில் மிகப்பெரிய கிரியை செய்வதும் மிகமிக சக்திவாய்ந்த விசையாக செயல்படுவதும் ஜெபம் என்றால் மிகையல்ல.

தேவனுடைய வாக்குத்தத்தங் கள் நெம்புகோல் போன்றவை. அவை எல்லாவற்றையும் தூக்கி உயர்த்திவிடக் கூடியவை. இயேசுவின் தியாகபலி நெம்புகோலைத் தாங்கும் ஆதாரமா யிருக்கிறது. ஜெபம் இதன் மேல் வைக்கப்படும் பாரமாயிருக்கிறது. நெம்புகோலின் மேற்பகுதியில் பாரத்தை வைத்து கீழ்நோக்கி அழுத்தும்போது மாம்சபிரகாரமானதும் ஆவிக்குரிய தன்மையுடையதுமான பன்மடங்கு பாரங்கள் தூக்கப்படுகின்றன.

**தேவன் கிருபையுள்ளவராயிருந்தாலும் நாம் ஜெபிக்கும்படி காத்திருக்கிறார்.** நாம் போராடி ஜெபிக்கும்போது அவர் தமது அளவில்லாத ஆசீர்வாதங்களையும் கிருபையையும் தந்து கனப்படுத்து கிறார். அவர், "எருசலேமே உன் மதில்களின் மேல் பகல் முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயி ராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகி றேன்........ அமர்ந்திருக்க விடாதிருங்கள்" *ஏசா.62:6-7* என்கிறார்.

தேவன் தமது பிள்ளைகளின் ஜெபத்திற்கு ஏற்றபடி காரியங்களை நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறார். அவரது அடியார்கள் சமயமெடுத்து ஜெபிக்கிறவர்களாகவும், ஜெபத்தில் தரித்திருப்பவர்களும், ஜெபத்திற்காக முக்கிய காரியங்களைத் தெரிந்தெடுத்து வேத வசனத்தின் அடிப்படையில் ஜெபிக் கிறவர்களுமாயிருந்தால் தேவன் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். பெரிய எழுப்புதலும், சிறந்த மிஷனெரிப் பணி யும் நடைபெறும். நமது கரங்களில் ஒப் படைக்கப்பட்ட ஜெபத்தின் வல்லமை குறித்து நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

## தெய்வீக அன்பிற்கு ஸ்தானாபதிகள்

"எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர் களாயிருங்கள்; அன்பு திரளான பாவங் களை மூடும்" *1 பே.4:8.* 'ஊக்கமான' என்ற பதம் கொதிக்கிற அனலுள்ள, எரிகிற அன்பைக் காட்டுகிறது. இந்த அன்பு தெய்வீக அன்பு. மறுபிறப்பால் நம்மில் ஊற்றப்பட்டு, அதிலுள்ள பாவபகுதிகள் சுத்திகரிக்கப்பட்டு கிருபையால் பலப்படுத்தப்படுகிறது.

தேவனுடைய இருதயத் திலுள்ள வாஞ்சை நமது இரட்சிப்புக்காக பகிர்ந்தளிக்கப்படுவதோடு பிறர் மேல் ஊற்றும்படியாக ஒரு பரிசுத்த இருப்பாக நமக்கு அளிக்கப்படுகிறது. தேவனுடைய உணர்வுகளையும் அவரது இரக்கம், இனியதன்மை ஆகியவற்றை பிறருக்கு எடுத்துச்செல்லும் வாய்க்கால்களாக நமது ஆத்துமா இருக்க வேண்டும். இவ்வுலகி லேயே அன்பின் மார்க்கம் என்பது ஆண்டவராகிய இயேசுவின் மார்க்கம் ஒன்றே. பிற மார்க்கங்கள் பயம், குரூரம், நிர்விசாரம், மூடநம்பிக்கை ஆகியவை அடங்கியது. பேர்க்கிறிஸ் தவர்களின் மார்க்கமும் சடங்குகள், தூய அனுசரிப்புகள், பிளவுகள், பேராசை, உலக வல்லமை ஆகியவை நிறைந்து காணப்படுவதே தவிர உண்மையான அன்பு இல்லை.

கிறிஸ்துவின் தூய மார்க்கம் அன்பில் அஸ்திபாரமிடப்பட்டு, அன்பி னால் பிரஸ்தாபிக்கப்பட்டு தெய்வீக நியமங்களின் நிறைவேறுதலாயிருக் கிறது. தூய, சுயநலமற்ற தெய்வீக அன்பு உடையவர்களைப் பார்த்து பிறர் ஆச்சரியமடைவார்கள். தேவன் நம் மிலுள்ள அன்பின் அளவுக்குத் தக்கதாக நம்மைக் கொண்டு கிரியை செய்வார். நம்மில் அளிக்கப்பட்ட தெய்வீக அன்பை எப்படி பிறருக்கு நாம் அளிக்கிறோம் என்பதற்கு நாம் கணக்குக் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## பிறரை உபசரிக்க நாம் உக்கிராணக்காரர்

"முறுமுறுப்பில்லாமல் ஒருவரை யொருவர் உபசரியுங்கள் ........ தேவ னுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளை பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கி ராணக்காரர் போல ஒருவருக்கொருவர்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவி செய்யுங்கள்" *1 பேது.4:9-10.* உபசரித்தல் என்பது தேவனது ஊழியக்காரர்களை உபசரிப்பது மட்டுமல்ல, ஏழைகளின் பசியை ஆற்றுவது, தேவையுள்ளவர்களுக்கு ஆடைகளளிப்பது, சுகவீனரைக் கவனிப்பது, அனாதைகளைப் பராமரிப்பது, பிறரது தேவைகளுக்காக பணம் பொருள் போன்றவற்றைக் கொண்டு பிறருக்கு உதவி செய்வது போன்றவை கள் அடங்கும்.

அனேக கிறிஸ்தவர்கள் பிறருக்குக் கொடுக்க அதிக பணத்தை விரும்புகிறார்கள். ஆனால் ஒரு சிலரே தங்களால் இயன்றதைக் கொடுக்க முன்வருகிறார்கள். ஒரு மனிதன் உக்கிராணக்காரனாயிருக்க அவனது தேவை உத்தமம், எஜமான் மேலுள்ள நம்பிக்கை இவை மட்டுமே போதும் என்பது வேதத்தில் கூறப்பட்டுள்ள சத்தியம். சிறு காரியங்களிலிருந்தே உத்தமம் நிரூபிக்கப்படும். கொஞ்சத்தில் உண்மையாயிருப்பவர்கள் அனேகத்தில் உண்மையாயிருப்பார்கள். தேவன் நம்மை கவனிக்கிறார்.

### தேவ வசனத்தில் உக்கிராணக்காரர்

நமது கரங்களில் கொடுக்கப்பட்டுள்ள இன்னொரு பொக்கிஷம் தேவ ஆவியால் தரப்பட்ட வேதவசனங்கள். "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன். ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்" வச.*11.* தேவன் பேசுவதை தூய ஆவியானவர் மூலம் கேட்பதும் எத்தனை பெரிய கனமானது. பின்பு அதை பிறர் கேட்க அறிவிப்பது எவ்வளவு மேலானது!

இவ்வுலகின் மிகப்பெரிய பொக்கிஷம் தேவ வசனமே. அனைத்து நல்ல சட்டங்களுக்கும் ஆட்சிகளுக்கும், அனைத்து சன்மார்க்க நெறிகளுக்கும், தூய்மையின் அந்தஸ்திற்கும், கலாச்சாரத்தின் ஆரம்பத்திற்கும், ஞானத்திற்கும், தனிநபர்களும், தேசங்களும் இரட்சிக்கப்படுவதற்கும், வாலிபருக்கு ஒளியூட்டி வழிநடத்தவும், வயோதிபரின் கஷ்டங்களிலும், வயோதிபத்திலும் ஆறுதலளிக்கவும் காரணமாயிருக்கிறது.

வேதவசனத்திற்கு நல்ல உக்கிராணத்துவமுடைய நாடுகள் உயர்ந்ததையும் பிற நாடுகள் வீழ்ந்து போனதையும் சரித்திரத்தில் காண்கிறோம். தேவன் தமது வசனத்தை *1500* ஆண்டுகள் இஸ்ரவேல் தேசத்திடம் ஒப்படைத்தார். அவர்கள் வசனத்திற்கு உண்மையுடையவர்களாயிருந்தால் என்றென்றும் அதன் பயனையடைந்திருப்பார்கள். அவர்கள் மனித இனத்திற்கே தலைவர்களாயிருந்திருக்கலாம். இந்த சத்தியம் சபைகளுக்கும், கூட்டு சபைகளுக்கும், தனிநபர்களுக்கும் பொருந்தும். தேவ வசனம் தெய்வீக உப்பு. அது அழிவை அகற்றி பாதுகாக்கக்கூடியது.

'நான் பாவஞ் செய்யாதபடி உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்' சங்.119:11 என்கிறார் சங்கீதக்காரன். இந்த வசனம் நமது இயற்கையில் ஊடுருவி, நமது எண்ணங்களில் கலந்து, நமது அன்பை அனலூட்டி, நமது செயல்களை வழிநடத்தி, சம்பாஷனைகளை உருவாக்கி நாம் நிற்கும் கன்மலையாக நிற்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன் எனது சுகவீனப் படுக்கையில் நான் எந்த நன்மையைச் செய்யமுடியும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது என் இருதயத்தில் தூய ஆவியானவர் இவ்வாறு பேசினார்: "நான் எனது வார்த்தையையும் உள்நோக்கத்தையும் தூய வேதபுத்தகத்தில் தந்திருக்கிறேன். ஐசுவரியவானிடம் மில்லியன்கள் பணம் இருப்பது போல ஆவிக்குரிய உலகில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுண்டு. ஆனால் நான் கேட்பது நீ எனது வார்த்தையைக் கூறும் ஒரு உக்கிராணக் காரனாயிருக்க வேண்டும். இதைப் பிரசங்கிக்க வேண்டி ஜெபிக்க வேண்டும். இவ்வுலக ஐசுவரியங்களெல்லாம்அழிந்து போனாலும் எனது வார்த்தை பொன்னை போல நீடித்திருக்கும்."

நாம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட தேவ வசனத்தை நேர்மையற்றும் சுயநலத்தோடும் பயன்படுத்துகிறோமா? அல்லது இந்த தெய்வீக பொக்கிஷம் நமக்காகப் பரத்திலிருந்து இறங்கி வந்தது என்று பயத்தோடு பயன்படுத்துகிறோமா? தேவன் நமது இருதயத்திலும், கரத்திலும் ஒப்படைத்திருக்கும் இந்த முக்கிய பொக்கிஷத்தை உத்தமமாக பயன்படுத்தினால் அவர் வருகையில் நல்ல பலனைப் பெறுவோம்.

## தேவனுடைய கிருபை எழுப்புதலுக்கான நம்பிக்கையை தருகிறது

***God's grace gives hope for revival***

Rich Carmicheal

உற்சாகமுள்ள சபையின் அடையாளம் அப்.4:33-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. "அவர்களெல்லார் மேலும் பூரண கிருபையிருந்தது." கிருபையில் பெருகி வளரும் சபையின் அழகிய விளக்கம் *அப்.2:42-47* வசனத்தில் காணப்படுகிறது (வாசிக்க). சபை எப்படியிருக்க முடியும் என்பது இங்கு விளக்கப்படுகிறது. இத்தகைய ஆவிக்குரிய உறுதியின் மத்தியில் பெருகிவரும் தேவகிருபையின் தாக்கமிருக்கிறது.

சபையின் சித்திரம் எப்போதும் இவ்வளவு மகிமையுடன் இருப்பதில்லை. யாக்கோபு ஒரு சபையைக் குறித்து சண்டைகளும், வாக்குவாதங்களும், பொருளாசையும், ஜெபத்தாழ்ச்சியும், சுயநலமும், லௌகீகமும், பொறாமையு மிருப்பதாக எழுதுகிறார் *யாக்.4:1-5.* இந்த விசுவாசிகளின் பிரச்சனைகளுக்கு அடிப்படையாயிருந்தது பெருமை. எனவே யாக்கோபு, அதைக்குறித்து 'தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்' யாக்.4:6 என்று நினைப்பூட்டுகிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் சபைகளில் ஊற்றப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கும் அதிக அளவிலான கிருபையை தேவன் ஊற்றுவதற்கு இந்த சபையின் பெருமை தடையாயிருந்தது. ஆயினும் இந்த நிலையிலும் தேவனுடைய அதிக அளவிலான கிருபை கிடைக்கக்கூடும் என யாக்கோபு நம்பிக்கை தெரிவிக்கிறார். "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" *4:8.* இது போலவே அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் *5:20*-ல் பாவம் பெருகின இடத்தில் கிருபையும் பெருகியது என்கிறார்.

எனவே உலகிலோ, சபையிலோ எத்தகைய தாழ்வான நிலைமை காணப்பட்டாலும், எந்த அளவில் பாவம் பெருகினாலும் தேவ கிருபையும் பெருகுகிறது. தேவன் இத்தகைய அதிசயமான கிருபையை அளிப்பதோடு, அவர் தமக்கு முன்பாகத் தம்மைத் தாழ்த்துகிறவர்களுக்கும் அதைக் கொடுக்கவும் வாக்களிக்கவும் கூடியவராயிருக்கிறார். எனவே யாக்.4:6-10 வசனங்களில் இப்படி வாசிக்கிறோம்: "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்"

தேவன் தமது இயற்கையின்படி கிருபையின் தேவனாயிருக்கிறார். எனவே நம்மை மன்னிக்கவும், குணமாக்கவும் நமக்கு உதவி செய்யவும், நம்மை ஆசீர்வதிக்கவும் அவர் ஆவலோடிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு 'சகல கிருபையும் பொருந்திய தேவன்' *1 பே.5:10* என்று குறிப்பிடுகிறார். எபிரேய நிருப ஆக்கியோன் அவரது சிங்காசனத்தை 'கிருபாசனம்' *எபி.4:16* என்று குறிப்பிடுகிறார். அவர் அளிக்கும் கிருபை போதுமானது *2 கொரி.12:9,* அதிகமானது ரோமர் 5:17.

எபே.1:6, 2:7 நமக்கு நேராக அது பெருகி வருகிறது. 1:7-8 அவரது இருதயத்திலிருந்து ஈவாக பாய்ந்து வருகிறது.

*எபேசி.2:8, 2 தீமோ.1:9* என்றெல்லாம் நாம் வாசிக்கிறோம். அவர் வானங்களைத் திறந்து இத்தகைய கிருபையை சபையின் மீது பொழிந்தருளினபடியால் இன்று நாம் 'அவர்களெல்லார் மேலும் மிகுந்த கிருபை உண்டாயிருந்தது' என்று கூறமுடிகிறது.

நமது ஆண்டவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அது போலவே அவர் கிருபையினைப் பொழிய சித்தமுள்ளவராகவும், கூடியவராகவுமிருக்கிறார். எனவே நாம் நம்மை அவருக்கு முன்பாகத் தாழ்த்தி அவர் முகத்தைத் தேட வேண்டியது நிபந்தனையாயிருக்கிறது. அனேக விசுவாசிகள் இன்று அவருக்கு நேராக மனந்திரும்புதலோடு திரும்பி, தங்களை தாழ்த்தி அவரது கிருபையையும், மகிமையையும் பூமியில் ஊற்றுவதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு நாமும் இணைந்து ஜெபத்தில் நம்மைத் தாழ்த்தி அவருடைய கிருபையைத் தேடி அதன் மூலம் அனேகருக்கு இரட்சிப்பையும், எழுப்புதலையும் கொண்டு வருவோம். வானத்திற்கு நேராக நமது கண்களை ஏறெடுப்போம். இரக்கங்களின் தேவன் நமக்கு அதிகக் கிருபையை அளிப்பாராக.

(2-ம் பக்க தொடர்ச்சி)

**எபனேசர்,** அசெம்பிளி ஆப் காட் அவர்களுக்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

**3.** *20-ம் தியதி காலை 10.00 மணி முதல் பகல் 2.00 மணிவரை* Wright Myo Panchayat Hall, Wimberlygunj, *அந்தமான் என்ற இடத்தில் உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்து நடத்தின* **Pr. Dasarath,** *ஷைலோ சபை* (Shiloh Church) *அவர்களுக்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.*

*மிகவும் தொலைவிலுள்ள அந்த இடத்திற்கு நீண்டநேரம் காரில் சென்று, கார்களை ஏற்றிச் செல்லக்கூடிய சிறிய படகில் சென்று மறுகரையில் இறங்கி, மறுபடியும் நீண்ட தூரம் காரில் பிரயாணம் பண்ணி, அந்த இடத்தை அடைந்தது மிகவும் வித்தியாசமான அனுபவமாயிருந்தது. எனவே 2.00 மணிக்கு உபவாச ஜெபத்தை முடிக்க வேண்டியதாயிற்று.*

*எல்லோரும் உணவு அருந்திய பின், மறுபடியும் கார் பயணம், படகில் சிறிது நேர பயணம், திரும்பவும் கார் பயணம் செய்து சுமார் 5.00 மணியளவில் தங்குமிடம் வந்து சேர்ந்தோம்.*

*21-ம் தியதி ஞாயிறு அதே போதகர் தன்னுடைய ஷைலோ சபையில்* (Shiloh Church) *நடைபெற்ற பரிசுத்த ஆராதனையில் எங்களை அன்போடு பயன்படுத்தினார்.*

*22-ம் தேதி திங்கள்கிழமை அதே ஷைலோ சபையில் நடைபெற்ற பெண்கள் ஜெபக்கூட்டத்தையும் நம்முடைய சகோதரர்கள் நடத்தினார்கள். அன்று இரவு* **Pr. Dasarath**, *ஷைலோ சபை, அவர்கள் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து, ஜெபித்து, எங்களை மிகவும் அன்புடன் வழியனுப்பினார்கள். அவர்களுக்காக என் தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன்.*

*23-ம் தியதி காலை விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்தோம். மாலை 5.15 மணி சென்னை கன்னியாகுமரி துரித ரயில் வழியாக 24-ம் தியதி புதன் காலை 6.00 மணி அளவில் சுகமாய் நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.*

**4.** எல்லா கூட்டங்களிலும் எங்களுடைய தமிழ் மொழியை மிகவும் நேர்த்தியாய் ஹிந்தியில் மொழிபெயர்த்த சகோதரர் **ஜெயக்குமார்** அவர்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இவர் சிறந்த வேத பண்டிதரும், ஆழமாய் பிரசங்கிக்கிறவரும் என்று பின்னர் கேள்விப்பட்டு இன்ப அதிர்ச்சி அடைந்தேன்.

**5.** *16-ம் தியதி முதல் 22-ம் தியதி வரை 7 நாட்களும் எங்களை மிகவும் அன்புடன் தங்கள் வீட்டில் தங்க வைத்து, சிறப்பாய் உபசரித்து உதவின எனது உடன் பிறந்த சகோதரன்* (late) *திரு.* **D.தியோடர்** *அவர்களின் மகள்* **சோபியா பிராங்ளின்**, *அவர் கணவர் திரு.* **ஆன்டோ பிராங்ளின்** *ஆகியோருக்காக ஆண்டவரை அதிகமாய் துதிக்கிறேன்.* "...... **அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல**" *அப்.28:2. விமான நிலையம் வரை அவர்கள் வந்து வழி அனுப்பின நிகழ்ச்சி மறக்க முடியாதது.*

**6.** விமான நிலையத்திற்கு வந்து அன்போடு அழைத்துச்சென்று, திரும்பவும் விமான நிலையத்திற்கு அழைத்து வந்து அன்புடன் வழி அனுப்பின அவர்கள் மகன் **மெர்லின் A. ஜாஸ்பர்** -க்காக **(ஜோ)** என் தேவனை துதிக்கிறேன்.

"**ஜுப்ளி ஹால்**" ஒழுங்கு பண்ணினதிலிருந்து, ஊழியங்களுக்கு எங்களை அழைத்துச் செல்வதிலும், அனைத்து காரியங்களிலும் எங்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான். "...... **ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்**" *2தீமோ.4:11.*

**7.** "**எழுப்புதலுக்காக இதய கதறல்**" *7 மணி நேர உபவாச ஜெபத்திற்காக மாதந்தோறும் அடியானோடு அலைகிற* ***Rev. K.* துரைசிங்,** *சகோ. **W.** **பிரகாஷ்,*** *சகோ* **கிப்சன் சாமுவேல்,** *பாஸ்டர்* **அற்புதராஜ்** *ஆகியோருக்காக, அந்தமான் வரை வந்து 4 நாட்கள் உபவாசத்தோடு ஊழியம் செய்த அவர்கள் தியாகத்திற்காக தேவனை மகிமைப்படுத்துகிறேன்.*

*போன் மூலம் தொடர்பு கொள்ளுதல், அச்சடிப்பு வேலைகள், வாகன வசதி அல்லது டிக்கெட் முன்பதிவு செய்தல், இன்னும் உபவாச ஜெபத்திற்கான அனைத்து வேலைகளையும் பொறுப்பாகவும் நேர்த்தியாகவும் ஜெபத்துடன் செய்கிற மகன்* **சாமுவேல் பின்னி**-*க்காகவும் அன்புள்ள தேவனை நன்றியோடு துதிக்கிறேன்.*

*எபிரேயர் 6:10* "**ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே**".

*தேவன் கிருபையாய் அந்தமான் 7 நாட்கள் ஊழியங்களையும் அபரிமிதமாய் ஆசீர்வதித்தார். அழுது ஜெபிக்க வேண்டியதன் அவசியத்தை, "ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு" தமது வசனத்தின் மூலம் வெளிப்படுத்தினார் ரோமர் 8:26*

*அல்லேலூயா.*

*ஜெபித்த தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. அடுத்த ஆண்டுக்கும் 12 இடங்களை ஒழுங்கு செய்துவருகிறோம். கர்த்தருக்குச் சித்தமானால் பெப்ரவரி மாதம் டெல்கியிலும், ஏப்ரல் மாதம் மும்பையிலும், ஜுன் மாதம் பெங்களூரிலும் செப்டம்பர் மாதம் குஜராத்திலும் நடைபெறும் உபவாச ஜெபங்களுக்காக அதிகமாய் ஜெபியுங்கள்.*

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*
*தேவ கிருபை உங்களோடிருப்பதாக.*

*உங்கள் சகோதரன்,*

**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)


ஆசிரியர் : 94980 30295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 89404 64531
அலுவலகம் : 95432 21008

காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)


## பத்திரிகை செய்திகள்

### ஜனவரிக்குள் 20 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்

*தலைமை தேர்தல் கமிஷனர் பதில்*

30 நாள் அவகாசம்

18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க வழக்கில் சென்னை ஐகோர்ட்டு வழங்கிய தீர்ப்பின் நகல் எங்களுக்கு கிடைத்து இருக்கிறது. அதைப்படித்துப் பார்த்தோம். இந்த வழக்கில் மேல்முறையீடு செய்ய 30 நாட்கள் காலஅவகாசம் உள்ளது.அதுவரை நாங்கள் காத்து இருப்போம். 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால், உடனடியாக இடைத்தேர்தல் நடத்துவதற்கான பணிகளை தொடங்குவோம். 18 தொகுதிகளும் ஓர் ஆண்டுக்கு மேலாக காலியாக இருப்பதை சுட்டிக்காட்டி தமிழக தலைமை தேர்தல் அதிகாரி எங்களுக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்.

**ஜனவரிக்குள் இடைத்தேர்தல்**

ஏற்கெனவே திருப்பரங்குன்றம், திருவாரூர் சட்டசபை தொகுதிகள் காலியாக உள்ளன. இந்த 2 தொகுதிகளுக்கும் வருகிற ஜனவரி மாதத்திற்குள் இடைத்தேர்தல் நடத்தியாக வேண்டும். 18 எம்.எல்.ஏக்கள் தகுதிநீக்க வழக்கில் 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யாவிட்டால் இந்த 2 தொகுதிகளுடன் சேர்த்து மொத்தம் காலியாக உள்ள 20 சட்டசபை தொகுதிகளுக்கும் ஜனவரி மாதத்திற்குள் இடைத்தேர்தல் நடத்த வாய்ப்பு இருக்கிறது.


**Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

*Book pocket contains periodicals*

To